# சர்வவியாபி

MISSION PRESS 1840

SARVA VIABI

| 06-01-2019 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விளம்பி வருடம் மார்கழி 22 | வருட சந்தா ₹150<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 56<br>வருடம்-113 | இதழ் 1<br>பக்கம்-12 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/<br>2334360 | ஆசிரியர்: அருள்தந்தை C. அந்தோனி ரோச் |
|---|---|---|---|---|


## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ‘ஊர்பி எத் ஓர்பி’ நகருக்கும் உலகுக்கும் ஆன சிறப்புச் செய்தி



அன்புள்ளங்களே, ஆண்டிற்கு இருமுறை அதாவது கிறிஸ்து பிறப்பு பெருவிழாவன்றும், கிறிஸ்து உயிர்ப்பு பெருவிழாவன்றும் திருத்தந்தையர், ‘ஊர்பி எத் ஓர்பி’ எனப்படும், உரோம் நகருக்கும் உலகுக்கும் ஆன சிறப்புச் செய்தியை வழங்குவது மரபு. 24ம் தேதி இரவு, திருப்பலியை நிறைவேற்றி, கிறிஸ்து பிறப்பு குறித்த மறையுரையை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 25ம் தேதி நண்பகல், உரோம் நகரின் புனித பேதுரு பேராலய வளாகத்தின் மேல் மாடத்தில் தோன்றி, தன் 'ஊர்பி எத் ஓர்பி' செய்தியை வழங்கினார். இதோ, அதன் தமிழாக்கம்:

**கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள்:** அன்பு சகோதரர், சகோதரிகளே, கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்கள். உரோம் நகரின் விசுவாசிகள், திருப்பயணிகள், இந்த வாழ்த்துரை வழியே நம்மோடு தொடர்பிலிருக்கும் அனைவருக்கும், பெத்லகேமில் ஒலித்த மகிழ்ச்சி நிறை அறிவிப்பை புதுப்பிக்கிறேன்: “உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக” (லூக்கா.2:14). மாட்டுத்தொழுவம் நோக்கி இடையர்கள் விரைந்துசென்றதுபோல், நாமும், குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள், (லூக்.2:12) என்ற உன்னத அடையாளத்தின் முன்னர் சிறிது நேரம் நிற்போம். நமக்காக கன்னி மரியாவிடம் பிறப்பெடுத்த இந்தக்குழந்தை நமக்குச் சொல்ல வருவதென்ன? கிறிஸ்து பிறப்பு உலகிற்கு வழங்கும் செய்தி என்ன? இறைவன் ஒரு நல்ல தந்தை, நாமனைவரும் சகோதரர் சகோதரிகள் என்பதே, கடவுள் வழங்கும் செய்தி, இந்த உண்மையே, மனித குலம் குறித்த கிறிஸ்தவ கண்ணோட்டத்தின் அடிப்படை. இயேசு கிறிஸ்து நம் மீது பொழிந்துள்ள உடன்பிறந்த உணர்வு இல்லையெனில், நீதியான ஓர் உலகை நோக்கிய நம் முயற்சிகள் எல்லாம், தோல்வியாகவும், நம் உயரிய திட்டங்கள் கூட ஆன்மா அற்றதாகவும், வெறுமையானதாகவும் இருக்கும்.இதன் காரணமாக, என் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள், உடன் பிறந்த உணர்வுடன் கூடிய வாழ்த்துக்களாக உள்ளன.

ஒவ்வொரு நாட்டின், கலாச்சாரத்தின் தனி மனிதர்களிடையே உடன்பிறந்த உணர்வு நிலவ வாழ்த்துக்கள். மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், ஒருவர் மற்றவரை மதித்து செவிமடுக்கும் உடன்பிறந்த உணர்வு கொண்ட நிலைகளுக்கு வாழ்த்துக்கள். பல்வேறு மதங்களின் அங்கத்தினர்களிடையே உடன்பிறந்த உணர்வு நிலவட்டும்.

**மனித முகத்தில் வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் முகம்:** இறைவனைத் தேடும் ஒவ்வொருவருக்கும் இறைமுகத்தை வெளிப்படுத்தவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். இறைவனின் முகம் ஒரு மனித முகத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அது, ஒரு வானத்தூதரின் முகத்தில் அல்ல, மாறாக, ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் பிறந்த ஒரு மனித முகத்தில் வெளிப்படுத்தப்பட்டது. இறைவன் மனுவுரு எடுத்ததால், அன்பு, ஏற்புடைமை, மற்றும் இந்த ஏழை மனித குலத்தின் மீது அவர் கொண்டுள்ள மதிப்பு ஆகியவற்றின் வழியாக மீட்பு வருகிறது என்பதை எடுத்துரைக்கிறார். இந்த அன்பு, ஏற்புடைமை, மற்றும் இந்த ஏழை மனித குலத்தின் மீது கொண்டுள்ள மதிப்பு ஆகியவற்றை நாம், வெவ்வேறு இனங்களாக, மொழிகளாக, கலாச்சாரங்களாக பகிர்ந்து கொள்கிறோம். இருப்பினும் நாமனைவரும் மனிதகுலத்தின் சகோதரர், சகோதரிகளே.நம்மிடையே காணப்படும் வேறு பாடுகள், நம்மைப் பிரிப்பதோ நமக்கு ஆபத்தை வருவிப்பதோ அல்ல. அவை, வளத்தின் ஆதாரமே. ஒரு மொசைக் ஓவியத்தை உருவாக்கும்போது, ஒரு சில நிறங்கள் அல்ல, மாறாக பல்வேறு நிறங்கள் கொண்ட சிறு கற்களை, அந்த ஓவியம் கொண்டிருப்பது அவசியம். சகோதரர், சகோதரி களாகிய நாம் ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள் என்பதை நம் குடும்ப அனுபவம் சொல்லித் தருகிறது. நாம், நம்மிடையே சில வேளைகளில், புரிதல் இல்லாதவர்களாக இருந்தாலும், முறிக்கமுடியாத ஓர் இணைப்புச் சங்கிலி நம்மைப் பின்னிப் பிணைத்துள்ளது. மற்றும், நம் பெற்றோரின் அன்பு, நாம் ஒருவரையொருவர் அன்புகூர உதவுகிறது. இதுவே, பரந்து விரிந்த மனித குல குடும்பத்திலும் உண்மையாகிறது. இங்கு கடவுளே, நம் பெற்றோராகவும், நம் உடன்பிறந்த உணர்வின் அடித்தளமாகவும், பலமாகவும் உள்ளார். தனி மனிதர்களாகிய நம்மை ஒன்றிணைத்துக் கொண்டுவர உதவும் உடன்பிறந்த உணர்வு சங்கிலியை நாம் மீண்டும் கண்டு கொள்ள, இந்த கிறிஸ்து பிறப்பு விழா நமக்கு உதவட்டும்.

**புனித பூமியில் அமைதி நிலவ...** “தன் அன்பின் முகத்தை வெளிப்படுத்த இறைவன் தேர்ந்துகொண்ட மண்ணில் கடந்த 70 ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெற்றுவரும் மோதல்களை முடிவுக்குக் கொணரும் நோக்கத்தில், பேச்சு வார்த்தைகளை மீண்டும் துவக்கி, அமைதியின் பாதையில்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

ஆசிரியர் பேனா...

# உறுதி கொள்வோம்

பழையன கழிதலும், புதியன புகுதலும் இயற்கையின் சுழற்சி வினைகள் ஆகும். ஓர் ஆண்டு கடந்து மற்றொரு ஆண்டு மலர்ந்துள்ளது. புதிய வானகமும் புதிய வையகமும் பற்றி திருவெளிப்பாடு நூல் உரைக்கிறது. இத்தகைய சுழற்சி வினைகள் நமக்கு சாதகமாக அமையலாம், பாதகமாகவும் அமையலாம். கிறிஸ்தவர்கள் என்ற நிலையில் நமது விசுவாச வேள்விகளில் நாம் உறுதிகொள்ள வேண்டும், நிலைத்து நிற்க வேண்டும்; இறைவிருப்பத் தேடலிலும் அதனை செயல் படுத்தலிலும் தளர்வுறுவது ஒரு நல்ல அறிகுறி அல்ல.

✷ கடந்த ஆண்டு, பலவிதமான அரசியல் சமூக சூழல் தாக்கங்களைச் சந்தித்தோம். சிறுபான்மையினர் என்பதற் காகவே நமது பல நலன்களும் உரிமைகளும் தாக்குதலுக்கு உள்ளான கசப்பான அனுபவங்கள் நிகழ்ந்தேறின. ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்ட ஜி.எஸ்.டி., பண மதிப்பிழப்பு ஆகிய நடவடிக்கைகள், பொருளாதார சூழல்கள், விலைவாசி உயர்வு, கல்வி கொள்கைகளில் புதியனவாக பழைமை புகுத்தல், சாலைகள் மேம்பாட்டு முயற்சிகளில் இயற்கைச் சீரழிவு, வளர்ச்சி என்ற பெயரில் விளைநிலங்கள் வாயுச் சுரங்கங்களாக்க முயற்சிகள் - இப்படி பொருளாதார சமூக நடுக்கங்களை அனுபவித்து வந்திருக்கிறோம். இதற்காக நாம் எவரையும் குறைகூற வேண்டியதில்லை. இது காலத்தின் சூழல் என்பதை புரிந்து ஏற்றுக்கொண்டு, நமது உறுதிக் கோட்பாடுகளில் நிலைத்து நிற்க வேண்டும். சொல்வதும் எழுதுவதும் எளிதாகலாம். நடைமுறை கடினங்களை அடித்தட்டு மக்களும் எளியவர்களும் சாமானியர்களும் நன்கு அறிவர். பசி, பிணி, வலி, வருத்தம், வேதனை, இழப்பு - இதெல்லாம் இவர்களுக்கு பழகிப்போன ஒன்று. ஆனால் அதிலிருந்து வெளிவர கடின உழைப்பையும் விடா முயற்சி யையும் நாம் முன்னெடுக்க உறுதிகொள்ள வேண்டும். இதற்கு விளம்பரம் தேவையில்லை, உறுதிப்பாடும் ஒருமைப்பாடும் இருந்தால் போதும்.

✷ **பாதையோ குறுகலானது**, மேடுபள்ளம் நிறைந்தது, கற்களும் முட்களும் நிறைந்தது. பிறந்து விட்டோம் வாழ்ந்தாக வேண்டும் என்பது சிலரது குறிக்கோள். அடுத்தவரோடு போட்டி மனப்பான்மை, பழிவாங்குதல், பெயர் பொருள் இழப்பிழைத்து மகிழ்தல் நம் குறிக்கோள் அல்ல. கிறிஸ்தவம் தோன்றிய முதல் நூற்றாண்டிலேயே கிறிஸ்தவம் இந்தியாவில் காலூன்றி விட்டது. எவரும் அயல் நாட்டவரல்ல. உரிமைக் குடிமக்கள். பிறப்பால், இருப்பால், இனத்தால், மொழியால், கலையால், கலாச்சாரத்தால் அடிப்படையில் நாம் இந்தியர்கள். நமது நாடு, மொழி, கலை, கலாச்சாரம் மிகுந்த வளம் கொண்டது, பழைமை வாய்ந்தது. நமது ஆளுமையிலும் இரண்டறக் கலந்துள்ளது. இரவும், பகலும், நாம் வாழும் இடத்திலும் பணித்தலத்திலும் இந்த அடிப்படை உண்மைகளை உறுதியாகப் பற்றி வாழ்வோம்.

✷ **புதிய ஆண்டில் புதிய மனநிலை** என்பது வளமான நமது வாழ்வையும் நாட்டையும் கட்டியெழுப்புவது என்பதே. தனி மனிதனின் உரிமைகளும் உடைமைகளும் பாதுகாக்கப்படும் ஜனநாயக அமைப்பின், புதுப்புது அர்த்தங்களில் பழைமை கோட்பாடுகளை மறைமுகமாகத் திணித்து மக்களை இரண்டுபடுத்துவதில் பலனில்லை. பன்மையிலும் ஒருமை, ஒருமையிலும் பன்மை என்ற கோட்பாட்டில் உறுதியாக நிலைத்திருக்க ஒரு உறுதி எடுத்துக் கொள்வோம்.

✷ **ஏழையர், புறக்கணிக்கப்பட்டோர்**, வறியோர், அகதிகள், போர்களால் பாதிக்கப்பட்டவர்கள், ஆள் கடத்தலுக்கு இலக்கானோர், புயல், பஞ்சம், நிலநடுக்கத்தால், எரிமலை யால் பாதிக்கப்பட்டோர் எங்கிருந்தாலும் நாம் செப உதவியும் பொருளுதவியும் செய்வோம். நமது நாட்டு சமூக, அரசியல், தலைவர்கள் நீதியோடும், பாரபட்சமின்றியும், அர்ப்பணத் தோடும் பணியாற்ற இந்த புதிய ஆண்டில் நம்மால் இயன்ற உதவிகளைச் செய்வோம். அவர்களும் நம் சகோதர சகோதரிகளே என்ற உணர்வுடன் அவர்களுக்காக செபிக்க நமக்கு கடமை உண்டு.

✷ **விசுவாசம் இறைவன் நமக்கு** அளித்த, பிரதிபலன் எதிர்பார்க்காத மாபெரும் கொடை. திருச்சபையின் முழு முதற்கருவூலமான விசுவாசத்தை நம் சொல்லாலும் செயலாலும் வாழ்வாலும் வழிபாட்டாலும் வாரி வழங்க அது நம்மை உந்தித் தள்ளுகிறது. திருச்சபையின் இருப்பும் இயற்கையும் மறைப்பணி ஆற்றுவதே. இதில் அனைவரையும் அரவணைக்கவும்,மதிக்கவும், ஏற்கவும், இணக்கமாக வாழவும் அதற்கு வேண்டிய அளவு பயிற்சி உண்டு. எனவே இதனடிப்படையில் நம் விசுவாசத்தை நாம் வாழ்வோம். இந்த உறுதிப்பாட்டில் இப்புதிய ஆண்டில் உறுதி கொள்வோம். **"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் / எண்ணுவம் என்பது இழுக்கு"** என்பது வள்ளுவர் மொழி. **"வறியோரை உற்று நோக்கி உதவ அஞ்ச வேண்டாம்"** என்பது நம் திருத்தந்தை பிரான்சிஸ் மொழி, **"ஏழையரின் உள்ளத்தோர் பேறு பெற்றோர்"** - இது இயேசு முன்னெடுத்த அன்பு மொழி. ●

---

● **சாலையோர சிறாருடன் இந்திய ஆயர் பேரவை கிறிஸ்மஸ்:** விசுவாசியின் இதயம், கிறிஸ்துவின் மீதுள்ள அன்பால் நிறைந்திருக்கும்போது, ஏழைகளோடு பகிர்ந்துகொள்ளும் முறை பற்றி அந்த இதயம் அறிந்திருக்கும் என்று, பெங்களூரு பேராயர் கூறியுள்ளார். ஏழைகளின் குரலுக்குச் செவிமடுத்து, அவர்களின் துன்பங்களைப் பகிர்ந்துகொண்டு அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது, உடனடித் தேவையாக உள்ளது என்று பெங்களூரு பேராயர் பீட்டர் மச்சாடோ அவர்கள் கூறியுள்ளார். பேராயர் மச்சாடோ அவர்கள் வெளியிட்டுள்ள கிறிஸ்மஸ் செய்தியில், ஏழைகள் மற்றும் சமுதாயத்தின் விளிம்புநிலையில் உள்ளவர்கள் மீது அன்பு காட்டப்படும்போது, அது ஆண்டவரின் ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் என்று கூறப்பட்டுள்ளது. கடந்த ஆகஸ்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கொடகு மாவட்டத்திற்கு 14 கோடியே பத்து இலட்சம் டாலருக்கு அதிகமான நிதியைச் சேகரித்துள்ள, பல்வேறு நிறுவனங்கள் மற்றும் குழுக்களுக்கு நன்றியும் தெரிவித்துள்ளார், பேராயர் பீட்டர் மச்சாடோ. - Fides

● **புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம் அருட்தந்தை யர்களின் ஆண்டுத் தியானம் (முதல் குழு) - 2019:** புதுவை-கடலூர் உயர் மறைமாவட்ட அருட் தந்தையர் களின் ஆண்டுத் தியானம் (முதல் குழு) 07-01-2019 (திங்கள்) முதல் 11-01-2019 (வெள்ளி) வரை, நமது உயர் மறைமாவட்ட பேராயர் இல்லத்தில் நடைபெறுகிறது. நமது உயர் மறைமாவட்ட பேராயர், அருட்தந்தையர்கள், துறவியர், இறைமக்களுக்காக செபிப்போம்.

வாரச் சிந்தனை

இயேசுவின் திருமுழுக்கு விழா (6-1-2018)

# "உம் பணி தொடர"

அருள்திரு. P.லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர்,
பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.



இயேசுவின் திருமுழுக்கு அனுபவம், திடீரென முளைத்த பண்புகள் அல்ல. மக்களின் வாழ்வோடு உரசிப் பார்த்து உணர்வுகளுடன் கலந்து, சிந்தனைகளைக் கூர்மைப்படுத்த செயலாக்கப் பயிற்சி தந்த ஒன்று. இலட்சியத் தெளிவைத் திருமுழுக்கால் பெற்று களம் இறங்குகிறார் இயேசு. அவரின் இளமைப் பருவம் ஆடம்பரமின்றி, விளம்பரமின்றி, நாசரேத்து ஊரில் அமைதியாக இருந்தது. இவ்வாறு இயேசுவின் மறைந்த வாழ்வு நிறைவு பெற்று பொது வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நிகழ்வே அவர் பெற்ற திருமுழுக்காகும். அது அவரின் பணி வாழ்வுக்கு முத்திரைப் பதிக்கப்பட்ட நாள்; அவரின் சமூக ஈடுபாட்டிற்கு ஓர் அடையாளமாகத் திகழ்கிறது; அவரது வாழ்வின் ஒரு திருப்புமுனையாகவும் அமைகிறது. பணி வாழ்வின் செயல்பாடு, மக்களின் பயன்பாடு, இறுதி இலக்கு இவைகள் இன்றைய வழிபாட்டின் கருப்பொருளாகும். தந்தை கடவுளின் தொடர் பணியில் அவர் அளிக்கும் உறு துணையும், தூய ஆவியாரின் வல்லமையும், தொலை நோக்குப் பார்வையும் இன்றைய விழாவில் சுட்டிக் காட்டப் படுகிறது.

**ஏன் இயேசுவுக்கு திருமுழுக்கு:** இயேசு ஏன் திருமுழுக்குப் பெற்றார் என்னும் கேள்வி மக்களின் மனதில் இன்னும் நீங்காத இடமாகத்தான் உள்ளது. தொடக்க காலத் திருஅவையிலும் இக்கேள்வி எழுந்ததுண்டு. நற்செய்தி நூல்கள் நான்கும் (மத்.3:13-17; மாற்கு 1:9-11; லூக்.3:15-22; யோவா.1:32-34) இயேசு திருமுழுக்கு பெற்றதைக் குறிப்பிடுகின்றன. நாம் தான் ஜென்ம பாவத்தோடு பிறக்கின்றோம். திருமுழுக்கின் வழியாக ஜென்ம பாவம் கழுவப்படுகின்றது. எனவே பாவ மன்னிப்பு பெறு வதற்காக வழங்கப்பட்டதிருமுழுக்கை இயேசுவும் பெற்றுக் கொண்டதால் அவரிடத்திலும் பாவம் குடிகொண்டிருந்ததா? என்ற ஐயப்பாடு அந்நாளில் மட்டுமல்ல, இன்றும் ஒரு சில மக்களின் மனதில் எழுந்துகொண்டுதான் இருக்கிறது. **இயேசு கடவுளோடு நெருங்கி ஒன்றித்திருந்தார் என்பதால் அவரிடத்தில் பாவம் குடிகொண்டிருக்கவில்லை என்பதை நாம் ஆணித்தரமாக உணர வேண்டும். அவர் தந்தை கடவுளின் அன்பிலிருந்து ஒரு நாளும் பிரிந்ததில்லை.** பாவம் தவிர மற்ற அனைத்திலும் நம்மைப் போல வாழ்ந்தார். அவர் திருமுழுக்கு பெற்றது கடவுளின் திருவுளத்திற்கு ஏற்ப நடந்த ஒரு நிகழ்ச்சி என்பதை நற்செய்தி நூல்கள் தெளிவுபடுத்துகின்றன. இயேசுவின் திருமுழுக்கின் வழியாக இரண்டு முக்கியமான உண்மைகளை அறிந்துகொள்கிறோம். முதலாவதாக, இயேசு திருமுழுக்கு பெற்றபோது "இவரே கடவுளின் அன்புமிக்க மகன்; இவரில் நான் பூரிப்படைகிறேன்" என்ற குரல் வானிலிருந்து ஒலித்தது. இதிலிருந்து மூவொரு இறைவனின் பிரசன்னம் இங்கே செயல்படுகிறது என்றும், இயேசு மூவொரு இறைவனின் இரண்டாம் ஆளாகிய மகனாகிய கடவுள் என்பதையும் அறிந்துகொள்கின்றோம். இரண்டாவது, தந்தை கடவுளின் விருப்பத்தை நிறைவேற்ற இறையாட்சிப் பணியை இங்குதான் தொடங்குகிறார் இயேசு. தன்னுடைய பணி வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் தான் பெற்ற திருமுழுக்கை இயேசு புதுப்பித்துக் கொண்டார். பெற்றுக்கொண்ட தூய ஆவியின் துணை பணி வாழ்வில் இறுதி இலக்குவரை அவரில் நிலைத்திருந்தது. தந்தைக் கடவுள் சொன்னதைச் செய்தார், செய்ததைச் சொன்னார்.

**தூய ஆவியின் வல்லமை:** யோர்தான் ஆற்றில் இயேசுவுக்கு யோவான் திருமுழுக்கு கொடுத்தபோது வானம் திறக்க, வல்லமையின் ஆவியானவர் புறா வடிவில் தோன்றி இயேசு மீது இறங்கியதாக இன்றையநற்செய்தி சுட்டிக் காண்பிக்கிறது. தூய ஆவியின் வருகை எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்கெல்லாம் வல்லமை பொழியப்படுவதையும், தொடர்ந்து மாற்றம் இருப்பதையும் விவிலியம் தெளிவாகப் பறைசாற்று கிறது. இயேசுவின் திருமுழுக்கின்போது பொழியப்பட்ட ஆவியானவர் இறைப்பணியை நிறைவேற்றுவதற்கான ஆற்றலை அவரது வாழ்வின் இறுதிவரை அவருக்குத் தந்ததை நாம் அறிய முடிகிறது. இறை விருப்பத்தை நிறைவேற்றுவதே தன் வாழ்வின் இலட்சியம் என்பதை உணர்ந்த இயேசு, அதுவே தன் உணவு (யோவா.4:34) என்றும், தன் வாழ்வின் இலட்சியம் (யோவா.6:38,39) என்றும் கூறுகிறார். மேலும் இறைப்பணியின் காரணமாக தான் துன்பப்பட வேண்டியிருந்ததும், அதையும் மனமுவந்து ஏற்க முன்வருகிறார் (லூக்.22:34). அதே போல் தொடக்கத் திருச்சபையினர் மீது பொழியப்பட்ட ஆவியானவர் (தி.ப.2:1-13) இறைவனின் பணியை செய்ய அம்மக்களை தூண்டி எழுப்பியதை (திப.2:42-47) லூக்கா விவரிக்கிறார். **தூய ஆவியானவர் கடலைப் போன்றவர்.** நாம் திருமுழுக்கு பெற்றுவிட்டோம் அதுவே போதும் என்று வாழ்ந்தால் அது கடல் தண்ணீரை ஜாடியிலே எடுத்துச் சென்று கடலை பார்க்காத மக்களிடம் இதுதான் கடல்நீர் என்று கூறுவது போலாகும். அவர்கள் பரந்த கடலை அறிந்துகொள்ளா மலேயேத்தான் இருப்பார்கள். எனவே இயேசுவின் திருமுழுக்கினால் அர்ச்சிக்கப்பட்ட நாம் அனைவரும், "சீயோனே! நற்செய்தி தருவளே உயர்மலை மேல் நின்றுகொள்! எருசலேமே! நற்செய்தி உரைப்பவரே! உன் குரலை எழுப்பு அஞ்சாதே!" என்று இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் எசாயா கூறுவதை மனதில் நிறுத்துவோம். நம் வாழ்விலும் செயலாக்கம் தருவோம், உண்மை இறைப்பணியாளர்களாவோம்.

**உம் பணி தொடர:** இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் இறைவன் சிறப்பானத் திட்டத்தை வகுத்துள் ளார். அத்திட்டம் கிறிஸ்தவர்களாகிய நமக்கு திருமுழுக்கு வழியாக வெளிப்படுகிறது. **திருமுழுக்கு வாங்கினால் மட்டும் உண்மை சீடர்கள் என்று சொல்ல முடியாது.** அதன் விளைவாக நம் சொல்லும் செயலும் இணைந்ததாகவும், சமய மற்றும் சமூக ஈடுபாடுகளை வெளிப்படுத்துவதாகவும் அமைய வேண்டும். கிறிஸ்தவ கடமைகளை எண்ணிப் பார்த்து திறம்பட செயலாற்ற முன்வர வேண்டும். பங்குகளில் தினமும் திருப்பலி நடைபெறுகிறது. ஏன் திருப்பலிக்கு வரவில்லை என்று மாணவர்களைக் கேட்டால் நான் பள்ளிக்கு செல்கிறேன், டியூசனுக்கு செல்கிறேன், கோச்சிங்கிளாஸ் செல்கின்றேன் என்று சாக்குபோக்கு சொல்ல மாணவர்கள் தயாராக இருக் கிறார்கள். வாட்சப், பேஸ்புக் மற்றும் இணைய தளத்தைப் பயன்படுத்தி நேரத்தை வீணடிக்க நேரம் இருக்கிறது. ஆனால் குடும்பமாக அமர்ந்து குடும்ப ஜெபம் சொல்லவும், தனிப்பட்ட விதத்தில் ஜெபமாலை சொல்லவும் நமக்கு நேரம் இல்லை. பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளை பங்குகளில் உள்ள பாடற்குழுவில் சேர்ந்து பாடல்களை பாடவும், பீடற்சிறுவர் குழுவில் சேர்ந்து திருப்பலிக்கு உதவி செய்யவும், திருப்பலி யில் வாசகங்களை வாசிக்க எந்த அளவிற்கு அனுப்பி வைக்கிறோம். மரியாயின் சேனை, வின்செண்ட் தே பால் சபை என்று பல பக்த சபைகள் இருந்தாலும் ஆர்வத்தோடு அதில் பங்கேற்கிறேனா? இவைகளையெல்லாம் நாம் செயல் படுத்தும் போது இறைவா! நான் உம் பணி தொடர இதோ வருகிறேன் என்று நம்மால் கூற முடியும். நம்முடைய மூதாதையர்களிடம், நம் பெற்றோர்களிடம் இருந்த அந்த இறைநம்பிக்கை இப்போதுள்ள இளம் தம்பதியினரிடம், பிள்ளைகளிடம் இருக்கிறதா என்பது மிகப் பெரிய கேள்விக் குறி! இவ்வாறு இயேசுவின் பணியை மற்றும் சமூக பணியை நாமும், தொடர்ந்து செய்கின்ற போது தான் தந்தை கடவுள் நம்மைப் பார்த்து கூறுவார். "**என் அன்பார்ந்த மகன் நீயே! மகள் நீயே! உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்.**" ●



# இயேசுவின் கேள்விக்கென்ன பதில்? (7)

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**“உங்களிடம் ஒன்று கேட்கிறேன்: ஓய்வு நாளில் நன்மை செய்வதா? தீமை செய்வதா? உயிரைக் காப்பதா? அழிப்பதா? எது முறை? (லூக்.6:9).**

வரிசையாக நான்கு கேள்விகளை அடுக்கிவிட்டார் இயேசு. எல்லாம் optional பதில்களுக்கான கேள்விகள்தான். இன்று மறையுரை ஆற்றும் பலர் அவையினரை நோக்கிக் கேள்விகளை எழுப்பிப் போதிக்கின்றனர். இன்றைய உரையைக் கேட்பவர்களுக்கும் அன்று இயேசுவின் உரையைக் கேட்டவர்களுக்கும் பெரிய வேறுபாடு உண்டு. அன்று கேட்டுக் கொண்டிருந்தவர்கள் இவர் பேச்சில் எப்படிக் குற்றம் கண்டுபிடிக்கலாம் என்று கேட்டுக்கொண்டிருந்தனர். ஆனால் இன்று அப்படி இல்லை. நம் வாழ்வுக்கு இன்று என்ன அறிவுரை கிடைக்கும் என்ற ஆவலோடு மறையுரையைக் கேட்கின்றனர்.

இயேசு தன்னில் குற்றம் காணக் காத்துக் கொண்டிருப்பவர்கள் மீது கவனம் செலுத்தவில்லை. அவர்களுக்கு அஞ்சவும் இல்லை. அவருடைய நோக்கம் எல்லாம் எப்படி துன்புறுபவர்க்கு உதவி புரிவது, எப்படி அவர்களுடைய மனச்சான்றைத் தொடுவது என்பதுதான்.

ஓய்வு நாளில் குணமாக்குவது குற்றமா இல்லையா என்பது பரிசேயர்களின் கேள்வி. இயேசுவின் கேள்வியும் இரண்டில் ஒன்றைத் தேர்ந்துகொள்ள வேண்டிய கேள்விதான். ஆனால் கோணம்தான் வித்தியாசம்: “ஓய்வு நாளில் நன்மை செய்வதா? தீமை செய்வதா? உயிரைக் காப்பதா? அழிப்பதா? எது முறை?”

அவர்களுடைய குறுக்குப் புத்தியிலிருந்து வரும் எந்த பதிலும் அவர்களுடைய கருத்தை நியாயப்படுத்த முடியாது. இயேசுவின் அறிவுத் திறனிலிருந்து வந்த ஆற்றல் வாய்ந்த கேள்விகள் இவை.

இயேசு தன் குரலைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களிடம் மனிதக் கடமைகளில் பெரும் உண்மையை எடுத்துக் கூறுகிறார் அதாவது அன்பு, இரக்கம், பரிவு இவைதான் இறைச் சட்டத்தின் சாரம்சம். யூதர்களோ 613 சட்டங்களை மக்கள் மீது திணித்திருந்தார்கள். இயேசு அவற்றைச் சுருக்கி இரண்டாகக் கொடுத்தார். மேலும் மனிதர்களுக்கும் விலங்கு களுக்கும் உள்ள வேறுபாட்டையும் குறிப்பிடத் தவறவில்லை.

மேலும் “உங்களில் எவரும் தம் ஒரே ஆடு ஓய்வு நாளில் குழியில் விழுந்துவிட்டால் அதைப் பிடித்துத் தூக்கிவிடாமல் இருப்பாரா? ஆட்டைவிட மனிதர் எவ்வளவோ மேலானவர்.” (மத். 12:11-12) விலங்குகளைவிட மனிதன் மேலானவன் என்பதை கிறிஸ்து மட்டும்தான் போதித்தார்.

“**நீங்கள் மண்ணுலகுக்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப்போனால் எதைக் கொண்டு இதை உவர்ப்புள்ளதாக்க முடியும்?**” (மத் 5:13)

**உப்பு ஒன்றில் மதிக்கப்படும். அல்லது மிதிக்கப்படும்.** இதை இயேசு மிக எளிதாகக் கூறிவிட்டார்.

உப்பு முதலில் இயேசு கிறிஸ்துவின் சீடர்களைக் குறிக்கிறது. ஏனெனில் அவர்களுடைய போதனை வாழ்வுக்குச் சுவையூட்டுவதாக இருந்தது. போதனை என்பது அவர்களுடைய வாழ்க்கை முறையையும் குறிக்கும். அது சாரமற்றுப் போனால் அவர்களுடைய போதனையை எதைக்கொண்டு சாரமாக்குவது? அவர்களுடைய போதனையை மக்கள் புறக்கணிப்பது மட்டு மல்ல அவர்களை காலால் மிதிப்பதுபோல் அவமதிப்பார்கள்.

உப்பு முற்காலத்தில் சம்பளமாகவும் வழங்கப்பட்டது. எனவேதான் salt என்னும் வார்த்தையிலிருந்து salary என்னும் வார்த்தை வந்தது.

சாரம் என்பது கடவுள் மீதும் மக்கள் மீதும் அன்பு, நற்செய்தியைப் போதிப்பதில் ஆர்வம் இவற்றைக் குறிக்கிறது. இயேசுவின் இந்தப் போதனையை யூதாஸ் கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால் தன் குரு மீதும் தன்னை அவர் தேர்ந்துகொண்ட பணியின் மீதும் ஆர்வம் குன்றியது. முடிவு நாம் அறிந்ததே. யூதாஸ் இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் முன்பே அதற்குரிய சம்பளத்தை அதாவது salary–யைப் பெற்றுக்கொண்டார்.

உப்பு உணவுக்குச் சுவையூட்டக் கூடியது. அதே சமையம் பொருட்களை அழியாமல் பாதுகாக்கக் கூடியது. இயேசுவின் சீடர்கள் உலகை அதன் அழிவிலிருந்து காக்க வேண்டிய வர்கள். உப்பு மண்ணுக்கு உரமாகவும் பயன்படுத்தப்பட்டது.

“**உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா?** ” (மத் 5:46)

சிலர் தங்களுடைய நன்மைத்தனத்தையும் வீரத்தையும் மார்தட்டிக் கூறிக்கொள்வர்: “நான் நல்லவனுக்கு நல்லவன், பொல்லாதவனுக்குப் பொல்லாதவன்” அவர்கள் என்ன பெரிதாகச் செய்துவிடுகிறார்கள்? இப்படி ஒரு கோணத்தில் இவர்களைப் பார்க்க அழைக்கிறார் இயேசு.

இயேசு “உங்கள் பகைவர்களை அன்பு செய்யுங்கள்” என்று சொன்னார். ஏன் அவர்களை அன்பு செய்ய வேண்டும் என்பதற்கு மேலே உள்ள கேள்வியில் விளக்கம் தருகிறார். கைம்மாறு கருதி நன்மை செய்பவர்கள்தான் ஏராளம். தன் போதனையைப் பலருக்காகக் கொடுக்கத்தான் இயேசு வந்தார். எப்போது கைம்மாறு கிடைக்கும் என்று அவர் கூறியதற்கு விளக்கமே தேவையில்லை.

அன்பு செய்பவர்களுக்கே அன்பு செய்யும் ஒரு கூட்டத்தினர் தங்களை விட வரிதண்டுவோரை இழிவாகக் கருதினர். எனவே இயேசு அவர்களைச் சுட்டிக்காட்டி அவர்களைவிட இவர்கள் எந்த விதத்தில் சிறந்தவர்கள் என்று சிந்திக்க அழைக்கிறார். மத்தேயுவும் வரி தண்டுபவராக இருந்தார் என்பதை நாம் நினைவு கூரவேண்டும். மேலும் வரிதண்டும் சக்கேயுவும் இயேசுவின் பாராட்டைப் பெற்றவர். அவருடைய வீட்டுக்கு மீட்பைத் தேடிச்சென்று வழங்கினார்.

அன்பை இன்னாருக்கென்று அணைபோடாமல் எல்லோருக்கும் அளிக்க வேண்டும். மேலும் அன்பு செய்வது கடவுளின் இயல்பாக இருப்பதால் அதைக் கைம்மாறு கருதாமல் தர வேண்டும். கைம்மாறு கருதி அன்பு காட்டினால் அதற்கு நன்றிகூறக் கூடத் தேவையில்லை. நண்பர்களுக்காக மட்டும் செய்பவர்கள் கடவுளுக்காக எதுவும் செய்வதில்லை. என்ன கைம்மாறு கிடைக்கும்? இயேசுவின் இந்தக் கேள்வி பதிலளிக்க முடியாமலே விடப்பட்டுவிட்டது.

தொடரும்



# வளமிகு இறைவாழ்வு

– சுவாமி ஆ. லூயிஸ்.

அன்பே கடவுள் என்பது போல, கடவுளைக் கணக்கற்ற வழியில் காலமெல்லாம் அவருடைய அன்பு மக்கள் பல்வேறு சமயங்கள் வழியாக உணர்ந்து அனுபவித்து வருகின்றனர். மனித குலத்தின் புரிந்துகொள்வதை, அவரது ஒரே மகன் வழியாக வாழ்வை வளமாக்கி வருகிறார். கடவுள் வாழ்வானவர் எனவே அவரது வாழ்வையே நமக்கு வழங்கி படைப்பை உடலாக்கி, நம்மை மிகவும் வியப்புக்குரிய முறையில் படைத்து, பராமரித்து வருவதை தினமும் உணர்ந்து வாழ்ந்தால், வாழ்வு ஒரு கலையாகும். கலையை இரசித்து வாழ இயலும். தாங்களும் தங்கள் பயணத்தில் சந்தித்த மக்களும், இப்போது உடனிருக்கும் மக்களோடும் நாம் மேற்கொள்ளும் வாழ்வு பல்வேறு அனுபவங்களின் தொடர் கதையாக, வரலாறாக இடம் பெற்று வருகிறது என்று மகிழ்வோம்.

**மனித வாழ்வு:** அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது. அதிலும் அன்பு பராமரிப்பு என்றால் மிகையாகாது.படைப்பு முழுவதிலும் தன்னைப் பதிய வைத்த கடவுள், தனது சாயலாகப் படைக்கப்பட்ட ஆண்-பெண் இருவரிலும் தன்னைப் பதியவைத்தது மனித குலத்தின் மகிமையாகும். மனிதத்தோடு இணைந்து பயணம் செய்ய விரும்பிய இறைவனை மனிதம் மதிக்காமல் மறந்து பாதை மாறியது. எவ்வளவோ அவர் முயன்றும் மனித மனம் உடன் பட இயலவில்லை, முடியவில்லை, முரணானது. முறைப்படுத்த மகன் இயேசு வழி வெற்றியை வழங்கினார். இருப்பினும் இன்னமும் இறைவனின் திருவுளத்திட்டத்திற்கு உலக சமூகமோ, திருஅவை சமூகமோ முழுவதும் வெற்றி பெறாமல் பயணித்து வருகிறது. இப்பின்புலத்தில் இன்று தாங்களும் நானும் எந்த நிலையில் இருக்கின்றோம், முயல்கின்றோம், முன்னேறுகின்றோம், வெற்றியைப் பெறுகின்றோம்.

இன்றைய நவீன உலகில் நாம் எவ்வளவோ நம்மைப் பற்றி மிகவும் பெருமை கொள்கின்றோம், போட்டி போடுகின்றோம், வெற்றி தோல்வி என்று பிளவுகளை நமக்குள் ஏற்படுத்துகின்றோம். தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துவதில் வளரும் நம் நாடு எவ்வளவோ முன்னிலையில் இருக்கின்றது என்று பயணிக்கின்றோம். ஆனால் நமக்குள் குடியிருக்கும் படைப்பாளரைப் பயன் படுத்துகின்றோம். தான் என்பதும் தனது என்பதும் பல்வேறு வடிவங்களில் தலைத் தூக்கி நிற்கின்றது. நமது வளர்ச்சிக்கு ஏற்றவாறு பதில் கொடுப்பது நல்லது ஆனால் நாம் கடவுளுக்குச் செலுத்தும் நன்றி மிகவும் குறைந்து வருகிறது. முதற் பெற்றோர்களின் பாவப் பயனே நம்மை இன்னமும் அதிகமாக அடிமை ஆக்குகின்றது. மீட்பின் பயனை நாம் அதிகமாக அனுபவித்து சுவைக்க முடியாமல் இருப்பது பரிதாபம். மனித ஆற்றல் தான் பாராட்டப்படுகிறது; இறைவனுடைய ஆற்றல் விளிம்பிற்குத் தள்ளப்படுகிறது. நம்பிக்கை இல்லையேல் வாழ்விற்குப் பொருளும் இல்லை, பயனும் இல்லை என்பதை உணர முற்படுவோம். கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்பது இன்னமும் நம்மில் தொடர்கின்றது. வெளிப்புலன்களைக் கடந்துபோக இயலாமல், முடியாமல் ஐம்புலன்களின் ஆட்சி அன்றாடம் நம்மில் கொடி கட்டி பறக்கின்றது. ஏதோ சில நேரங்களில் சிந்திக்கின்றோம், நம்புகின்றோம் ஆனால் விரைவில் புலன்களுக்கு அடிமையாகி விடுகின்றோம். நம்மை உயர்தளப்படுத்த எடுக்கும் முயற்சிகள் விரைவில் வீடு திரும்பி விடுகின்றன. புலன்களின் ஆர்ப்பாட்டத்தை இன்றைய சப்தத்திலும் நிழற்படங்களிலும் கண்டு மயங்கி விடுகின்றோம். நில், கவனி, செல் என்று பயணத்திற்கு வழங்கப்படுவதை மீறுவதுபோல, வாழ்விலும் மீறி விடுகின்றோம்.

**இறைவாழ்வு:** இறைவா, நீ இல்லாத இடமே இல்லை, நீர்தானே உலகின் எல்லை. அவனின்றி அணுவும் அசை யாது. அவர் இல்லையேல் ஒன்றுமில்லை என்பதெல்லாம் சிந்தனை அளவில் பதிவாகி பாடமாகி வருகிறது. ஆனால் அன்றாட வாழ்வனுபவத்தில் அவரைவிட தானும் தனதும் தான் தலைத்தூக்கி நிற்கின்றது. விளிம்பு நிலையிலிருந்து ஆழத்திற்குச் சென்றால் நலமாகும். ஆனால் புறப்பயணத் திற்கே நேரமின்றி, காலத்தைத் திருடி அடிமையாகி வருகின்றோம். அகப்பயணம் தான் அனைவருக்கும் தேவைப்படுகிறது.

தன்னையே ஒருவர் சரியாக, முழுமையாக உணராது, எவ்வாறு மனநிறைவோடு வாழ்கிறது. வாழ்வான இறைவன் நம்மோடு என்றும் இருக்கும்போது, நமது வாழ்வை நாம் அவரோடு இணைந்து உணர்ந்து பொருளோடும் அருளோடும் வாழ முயல்வது முறையாகும், முக்தியாகும். என்னைப் பிரிந்து உங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்ற அருள்வாக்கு நமது செவிகளில் விழுமுன், நான் வாழவில்லையா, நலமாக இல்லையா என்று சுயம் சப்தமிடுகிறது. அதோடு அகம் அடைந்து விடுகிறது. இவ்வாறு நாம் மேற்கொள்ளும் நாடகம் எத்தனை நாட்களாக, மாதங்களாக, ஆண்டுகளாகக் கடந்து செல்வதை, சற்று அமர்ந்து தியானித்தால் எவ்வளவோ நன்மைகளை நாமும் மற்றவர்களும் பெற்று பெருமையோடு வாழ முடியும்.

பொதுவாக கடவுளின் அனைத்து மக்களுக்கும் கடவுள் நம்பிக்கை உண்டு. அறிந்தோ அறியாமலோ சுயநல நம்பிக்கையாக மாறி விடுகிறது. எங்கு சுயநலம் இடம் பெறுகின்றதோ அங்கு வாழ்வுக்கு வாய்ப்பில்லை. நம் எல்லாருக்குள்ளும், எல்லார் மத்தியிலும் திருவெளிப் பாட்டில் கூறப்படும் பெரிய அரக்கப் பாம்பு ஒன்று குடிகொண்டு வருகிறது. இதைத்தான் அன்னை மரியாள் தன் காலால் நசுக்கி அடிமையாக்கி, தான் அவரில் அனைவருக் கும் அரசியாக, புதிய ஏவாளாக அன்றும் இன்றும் நமது நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கி வருகின்றாள். தனது சுயநலத்தை மரியாள் அழித்தாள் எனவே அரசி. இவ்வாறு தான் ஆண் பெண் அனைவரும் சுயநலத்தை அழித்தால் அரசன் அரசி, தலைவன் தலைவியாக கடவுளின் திருவுளத் திட்டத்திற்கு ஏற்ப வாழ முடியும். இதைத்தான் மீட்பின் நற்செய்தியாக இயேசுவில் கடவுள் நமக்கு அருள் பாலித்து வருகிறார். இதை கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மிலும், பிற மறை மக்களோடும் இணைந்து வாழ சான்று பகர, பயணிக்க அழைக்கப்படுகின்றோம். தரக்குறைவான எண்ணங்களை யும், மனித நேயத்திற்கும், கிறிஸ்தவ நேயத்திற்கும் ஒவ்வாதவைகளை எல்லாம் உதறித் தள்ளிவிட்டு பெருமையோடும், பணிவோடும் நல்லக் கிறிஸ்தவர்களாய் வாழ விரும்புவோம். இதற்கேற்ப திருஅவையும் கிறிஸ்தவ விசுவாசிகளை வழிநடத்திச் செல்ல வேண்டுவோம், வெல்வோம், வாழ்வோம்.



## இளையோரை... இறையாட்சிக்கு ஆற்றுப் படுத்துவோம்!! (கல்வி)

16.12.18

இதழ் தொடர்ச்சி..

-வெட்டிவயல் வளவன்.M.A.,M.A.B.Lit

கல்வி கற்பது பற்றி "**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**" - திருமந்திரம் சொல்கிறது. **நமக்கு கிறித்துதானே குரு - கேட்போமா? வேண்டாமா?** இளையோரே! ஒன்றை மறந்துவிடாதீர். "**எதிரியும், துரோகியும் தான் உங்கள் வளர்ச்சிக்கு மறைமுக ஊக்குநர்கள்.** அவர்களை மோதுவதும், தடை செய்வதும் தவறு - விலகி நிற்காதீர். அவர்களது விமரிசனம், குறைசொல்லல், புறங் கூறுதல்தான் உங்களுக்கு உரமேற்றும் இயற்கை உரம் - கிரியா ஊக்கி. உன்னைப் பாராட்டுவோர் உன்னைக் கிணற்றுத் தவளையாக்கி விடுவர். உம் தவறைச் சுட்டிக் காட்டி திருத்த மாட்டார். ஆயிரம் நூல்கள், தராத அனுபவத்தை சில நேரம் ஒற்றை மனிதன் தந்து விடுவான்.

**உலகை உருவாக்கும் தோள்களே!** கைகளே! - வரவில்லாத செலவு மோகம், மேல்தட்டு (நாட்டு) கலாச்சாரம், வெட்டி, விருதாய் விழாக்கள் - பகட்டு வாழ்வு வேடிக்கை - - பக்தியற்ற விழா - சக்தியற்ற தேவைகள் குறைத்துக் கொள்வோம். அண்ணா, பெரியார், கலைஞர், காமராசா,கக்கன், ஒந்தூரார் போன்ற அரசியல்வாதிகள் சமூக உயர்வுக்கு - புரட்சிக்கு வித்திட்டு வளர்த்த அரசியல் கல்வியையும் அவர்களையும், ஆசானாக ஏற்போம். இறையாட்சி சமூக வளர அப்.பணி 2:17, 18-இல் கூறியதை மீண்டும் நினைவு கூர்வோம். யோ.2:18-ஐ கொஞ்சம் ஆழமாக சிந்திப்போம். இன்றைய நாளில், அரசியல் சாக்கடையில் பார்த்து கால் வைப்போம். நம் இறையாட்சிப் பணியில் ஆற்றுப்படுத்த, நல் இயக்கங்கள்... காளான்களாய் - போகின்றன. விழிப்போம்.

**சமூக அர்ப்பணிப்பாளர்களே!** உங்கள் தொழிலகத்தில் உங்கள் மேலாண்மை காட்டும் விசுவாசத்துக்கு (நம்பிக்கை) நாம் காட்டும் விசுவாசமே! என் உணர்வோம். **மரியாதை என்பது சமபாத்தியமாக்குவது – நேர்மை என்பது பிறர் பாராட்டுவது.** நம்பிக்கை ஒளி சிறுக சிறுக எண்ணெய் ஊற்றி ஒளிர வேண்டியது. "**எண்ணெய்யையும் நீரையும் என்று சேர்த்தால் சேர்ந்ததுபோல் தெரியும். ஆனால், சேராது. ஆனால், நீரில், பாலைக் கலந்துபார், பிரிக்க முடியாதபடி சேர்ந்துவிடும். உப்பும் கரைந்து சேரும். ஆகவே, உங்கள் வாழ்வு பயணத்தில் என்றும் சமூகத்துக்கு நீரிலே கலக்கும் பாலாக, உப்பாக கலந்து வாழ வேண்டுகிறேன்** " - **நீங்கள் உலகின் உப்பு**" **இயேசுவின் அமுதூறும் கல்வி.**

"நம்பிக்கையை தன் நம்பிக்கையால் மட்டுமே பெற முடியும்." இது "**சாணக்கியன் நீதி**" என்பது **உடையில், உணவில்** எளிமை, **கல்வியில்** மேன்மை, **பேச்சில்** இனிமை - **செயலில்** நேர்மை கொள்ளுங்கள். மனித குலத்துள் இளைஞர்க்குள்ள அடையாளம் அவர்களுடன் நின்றுவிடாது; அவர்கள் சார்ந்துள்ள மாபெரும் சமூகத்தை உலகை, உள்ளடக்கிய தாய், இருக்கவேண்டும். இவர்களைப் பற்றிய புரிதல்கள் கல்வித் திட்டத்தில் விடுபட்டுள்ளன. கல்வி வல்லுநர்கள் வெல்லும் நாள் எந்நாள்?

**ஒரே நாடு, ஒரே கல்வி, ஒரே கலாச்சாரம் என்ற நோக்கில் செயல் படும் ஆளும் அரசுகள்** U.G.C. கொள்கை வெளியீடு (24-6-18) **நுழைத்து, கருத்துருகேட்டும் கேளாமலும் நடைமுறைப்படுத்தும் செயல்** 120 கோடி மக்கள் வாழ, நாட்டுக்கு நல்லதல்ல - இளைஞர்கள் - சிந்திப்போமா? வீறுகொள்வது எப்போது?

**இளையோர்க்கு நம் பங்கு: பெற்றோரே! வழிகாட்டிகளே!**

## செபங்கலந்த ஆழ்ந்த இரங்கலை தெரிவிக்கிறோம்.

புதுவை - கடலூர் உயர் மறைமாவட்டம், அகரகோட்டாலம் பங்குதந்தையாக பணிபுரியும் அருட்திரு. S.P. ஆரோக்கிய தாஸ் அவர்களின் அன்னை **திருமதி. பிலோமினாள்** (வயது 78) அவர்கள், 25-12-2018 செவ்வாய் அன்று இறையடி சேர்ந்தார். 26-12-2018 புதன் அன்று மாலை 4.00 மணி அளவில், அவரது சொந்த ஊரான மையனூர் புனித விண்ணரசி அன்னை ஆலயத்தில் இடம் பெற்ற அடக்கச் சடங்கு கூட்டுத் திருப்பலியை அருட்தந்தை S.P. ஆரோக்கியதாஸ் தலைமையேற்று நிகழ்த்தினார். நமது உயர் மறைமாவட்ட முதன்மை குரு பேரருட்திரு. ஆ. அருளானந்தம் அவர்களும், 35 அருட்தந்தையர்களும் இக்கூட்டுத் திருப்பலியில் இணைந்து நிறைவேற்றினர். அருட்கன்னியர்களும் இறை மக்களும் இத்திருப்பலியில் பங்கேற்று, இறைவனடி சேர்ந்த அடியாருக்காக செபித்தனர். திருப்பலி முடிவில் நமது உயர்மறைமாவட்ட பேராயர் பெயரால் நமது முதன்மை குரு இரங்கல் செய்தி அளித்தார். அருட்திரு. மெல்கிசதேக் அவர்களும் இரங்கல் செய்தி அளித்தார். திருப்பலிக்குப்பின், இறையடி சேர்ந்த அடியாரின் திருவுடல் மையனூர் கல்லறையில் நல்லடக்கம் நடைபெற்றது. அன்னையை இழந்து துயருறும் அருட்தந்தை S.P. ஆரோக்கியதாஸ் மற்றும் அவரது தந்தை, உடன்பிறந்தவர்கள், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். இறைவனடி சேர்ந்த திருமதி. பிலோமினாள் அவர்களின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாற்றி அடைவதாக. - ஆசிரியர்.

---

**தலைவர்களே! நாட்டோரே! சமய தலைவர்களே!**

வறுமையில் அறியாமையில் வாழும் இளையோரை- இன்னும்

விளிம்புநிலை குறிக்கோள் இல்லா அரும்புகளை

தேடிநாம் போவோம்! அவர்தம் துயர்க்கும் - நாம்

செவிமடுப்போம்! இளம் சமாரியராக்குவோம்!

அழுகிற குழந்தைக்கு பாலூட்டல் "**அன்பு**" - தெருவில்

அழுகிற, தவிக்கிற குழந்தைக்கு பாலூட்டல் "**அருள்**"

திசைமாறும் தென்றல வர்களுக்கு "**ஆற்றுநர்**" ஆவோம்-என்றும்

அலர்ந்தார்க்கு உதவும் **ஆற்றுதல்** செய்வோம்.

**உடன் பிறப்புக்களே!** கெட்ட குமாரன் உவமையில் வரும் (லூக்.15:32)... தகப்பன் சொல் கேளாத இளைஞனைப் பார்க் கிறோம். திருந்தியதும் ஏற்கும் தந்தையைப் பார்க்கிறோம். பொறுமும் அண்ணனைப் பார்க்கிறோம். தவறியவன் தள்ளப்பட வேண்டும் என்பது மூத்தவன் எண்ணம். சில நேரம் தவறுக்கு மனமாறி வருந்துதல் உண்டு. மனம் திரும்பாமலே மன்னிப்பும் உண்டு. **கல் நெஞ்சம் நம்மில் இருக்க வேண்டாம் வருங்காலச் சிற்பிகளே! "என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள் யேசு சொன்ன கல்வி**"யை முதல் கல்வியாக ஏற்போம்! வாழுவோம்!!

இலக்கை நோக்கிப் பயணியுங்கள். இனி உங்கள் பயணப் பாதையை மாற்றுங்கள். டெண்டுல்கரை தெரிந்த நாம் சர்சிவி இராமனை, எடிசனை தெரியவில்லையே! விவிலியம் - சின்னக் குறிப்பிடம் மட்டும் மறைக்கல்வி அல்ல - ம(றை)றந்துபோன பல வேதபாடங்களும் உள்ளன. நமது தாத்தா பாட்டி, ஏன் பெற்றோர் கூட கல்விக் கற்காது கேள்வி ஞானம் பெற்றவர்கள் சிகரம் தொட்டவர்கள். "கற்றிலன் ஆயினும் கேட்க" என்ற குறள்வரிகள் உணர்த்துவது இந்த சிந்தனையைத்தான். ஆகவே கற்றிலன் ஆன நம் பெற்றார் - மூத்தோர் கல்வியையும் சிகரம் தொட ஏணியாக்குவோம்.

*- முற்றும்.*

# இயேசுவின் பிறப்பு விழா மற்றும் - தமிழ்த்தொண்டர்

## இறையடியார் துப்புயிஅடிகளாரின் அறிமுக விழா

• • • • • • • • • • • • •



இறை ஊழியர் அருட்திரு. லூயி சவேனியன் அடிகளாரின் வரலாற்று ஆணையம் 22-12-2018 சனிக்கிழமை மாலை புதுவைத் தமிழ்ச் சங்க வளாகத்தில் இயேசுவின் பிறப்பு விழா மற்றும் தமிழ்த் தொண்டர் இறையடியார் துப்புயி அடிகளாரின் அறிமுக விழா ஆகிய இரு விழாக்களைப் புதுவைத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து நடத்தியது.

புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு.வி.முத்து விழாவுக்குத் தலைமையேற்று, இயேசுவின் பிறப்புக் குடிலைத் திறந்து வைத்தார். புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டத் திருமண நீதிமன்ற நடுவர் அருட்திரு. எஸ்.பாஸ்கல்ராஜ் அடிகள், துப்புயி அடிகளாரின் திருஉருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு.வி. முத்து அவர்களுக்கு, மிஷன் அச்சக மேலாளர் அருட்திரு. சி. அந்தோனி ரோச் அடிகள், துப்புயி அச்சிட்ட தேம்பாவணி மூன்று தொகுப்பு நூல்களை வழங்க, இமாகுலேட் கன்னியர் சபை துணை தலைவர் அருட்சகோதரி ஃபினியன்மேரி துப்புயி அச்சிட்ட இல்லறவுத் தியான நூலை வழங்கினார்.

புதுவை தமிழ்ச் சங்கச் செயலர் பொறிஞர் மஊ. பாலசுப்ரமணியன், வரவேற்புரை வழங்கினார். மாந்தன் இதழாசிரியர் பொறிஞர் ஞா. ஜோசப் அதிரியன் ஆண்டோ, நோக்கவுரையாற்ற, துப்புயி வரலாற்று ஆணையத் தலைவர் அருட்திரு. ஆ.ச.அந்தோணிசாமி அடிகளார் துப்புயி அறிமுகவுரை நிகழ்த்தினார்.

புதுவைத் தமிழ்ச்சங்கப் பொருளர், பாவலர் சீனு.மோகன்தாசு உலகத் தமிழர் இயக்க விழிப்புணர்வு அறக்கட்டளை நிறுவனர் தமிழ்மாமணி துரை.மாலிறையன், பேராசிரியர் முனைவர் பு. ராஜ்ஜா மற்றும் குழந்தைகள் கலை இலக்கிய வளர்ச்சிக் கழக நிறுவனர் தமிழ்மாமணி அ.உசேன் முதலானோர் வாழ்த்துரை வழங்கினர். ஓவியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. புதுவைப் தமிழ்ச் சங்க ஆட்சமன்றக்குழு உறுப்பினர் கலைமாமணி ஓவியர் இபேர் தெலாப்போர்ல் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். பெருந்திரளானோர் விழாவைச் சிறப்பித்தனர்.

தகவல்: பொறிஞர். ஞா. ஜோசப் அதிரியன் ஆண்டோ.

**வத்திக்கான் திருப்பீடம்: 12 இறை ஊழியர்களின் வீரத்துவ பண்புகள் ஏற்பு:** புனிதர் நிலை பேராயத் தலைவர், கர்தினால் ஆஞ்செலோ பெச்சு அவர்கள், டிசம்பர் 21, வெள்ளி மாலையில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை வத்திக்கானில் சந்தித்து, 12 இறை ஊழியர்கள் பற்றிய விவரங்களைச் சமர்ப்பித்தார். ஜெர்மானிய மறைசாட்சி Richard Henkes, **இந்தியாவின் இறை ஊழியர்** Augustine John Ukken உட்பட, பன்னிரண்டு பேரின் வீரத்துவ பண்புகளை ஏற்றுக் கொண்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஜெர்மனியின், கத்தோலிக்க தூதுரைப்பணி கழகத்தைச் சேர்ந்த, அருள்பணியாளர் Richard Henkes அவர்கள், 1900 ம் ஆண்டு மே 26ம் தேதி ஜெர்மனியின் Ruppach எனுமிடத்தில் பிறந்தார். இவர், 1945ம் ஆண்டு, பிப்ரவரி 22 ம் நாள் Dachau வதைமுகாமில், கிறிஸ்தவ விசுவாசத்திற்காக கொல்லப் பட்டார். சீரோ மலபார் வழிபாட்டு முறையைச் சேர்ந்த அருள்பணி யாளர் Augustine John Ukken அவர்கள், பிறரன்பு அருள்சகோதரிகள் சபையை ஆரம்பித்தவர். கேரளாவின் Parappur ல் 1880 ம் ஆண்டு டிசம்பர் 19ம் தேதி பிறந்த இவர், 1956ம் ஆண்டு அக்டோபர் 13 ம் தேதி, Chowannur ல் காலமானார். மேலும், பத்து இறை ஊழியர்கள், போலந்து, பைலோ ருஷ்யா, மெக்சிகோ, அமெரிக்க ஐக்கிய நாடு, இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

- ♦ போலந்து நாட்டின் கிரக்கோவ் துணை ஆயர் Giovanni Pietraszko (1911-1988);
- ♦ இத்தாலியின் அமலமரி அருள்சகோதரிகள் பக்த சபையைத் தோற்றுவித்த அருள்பணி Giuseppe Codicè (1838-1915);
- ♦ இஸ்பெயினின் நற்செய்தி வீரர்கள் சபையை ஆரம்பித்த அருள்பணியாளர் Doroteo Hernández Vera (1901-1991);
- ♦ பைலோ ருஷ்யாவின் பிரான்சிஸ்கன் சபையின் அருள்பணியாளர் Melchiorre Fordon (1862-1927);
- ♦ இத்தாலியின் பிரான்சிஸ்கன் சபையின் அருள்பணியாளர் Girolamo Maria Biasi (1897-1929);
- ♦ மெக்சிகோவின், புனித அகுஸ்தீன் சபையின் அருள்பணியாளர் Michele Zavala Lopez (1867-1947);
- ♦ அமெரிக்க ஐக்கிய நாட்டில் பிறந்து, இத்தாலியில் காலமான, கிறிஸ்து அரசர் ஏழை சிறிய சகோதரிகள் சபையை ஆரம்பித்த Antonietta Giugliano (1909-1960);
- ♦ இத்தாலியின் இயேசு கிறிஸ்துவின் திருப்பாடுகள் சபையின் சகோதரி Leonarda di Gesu Crocifisso (1908-1953);
- ♦ இத்தாலியின் புனித யோசேப் Patrocinio சபையின் அருள்சகோதரி Ambrogina di San Carlo(1909-1954);
- ♦ இத்தாலியின் புனித அன்னாள் அருள்சகோதரிகள் சபையை ஆரம்பிக்க உறுதுணையாய் இருந்த பொதுநிலை விசுவாசி Carlo Tancredi Falletti Di Barolo (1782-1838); ஆகியோரின் வீரத்துவ பண்புகளை திருத்தந்தை ஏற்றுக்கொண்டுள்ளார்.

108 இளம் உள்ளங்களுக்கு

## நூற்றாண்டு உறுதிமொழி



– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**புத்தாண்டு:** ஒவ்வொரு ஆண்டும் புத்தாண்டு கொண்டாட் டம் பல நாடுகளிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. சிலர் புத்தாண்டில் புதிதாக உறுதிமொழி எடுத்துக் கொண்டு புதிய பாதையில் புது வாழ்வுக் கான அடித்தளமிடுவதும் உண்டு. ஒப்ரா வின்ஃப்ரேயின் கூற்றுப்படி, "புத்தாண்டை ஆரவாரித்துக்கொள். நம்மை மீண்டுமாக சரி செய்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பம்."

**ஓர் அறைகூவல்:** 1900 ம் ஆண்டு டிசம்பர் 31ம் நாள் திருத்தந்தை 13ம் சிங்கராயர் புதிய நூற்றாண்டுக்கான இறை ஆசீர் வேண்டி அனைவரையும் செபிக்க சொன்னார். இந்த அழைப்பு ஜேம்ஸ் அல்பெரியோன் (James Alberione) என்ற ஒரு இளம் குருமட மாணவனை உத்வேகத்துடன் ஓர் உறுதி மொழி எடுக்கச் செய்தது. அவர் தன்னுடைய நாடு இத்தாலிக் காகவும், புதிய நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும் மக்களுக்காகவும் ஏதாவது செய்வது என்று உறுதி பூண்டார். அவர் தன் பணியை சிறந்த சமய சொற்பொழிவாளரும் எழுத்தாளருமாகிய புனித பவுலுக்கு அர்ப்பணித்தார்.

**அருள்மிகு ஜேம்ஸ் அல்பெரியோன்:** "இன்று பவுல் அடிகளார் உயிரோடிருந்தால் என்ன செய்திருப்பார்? அவர் மக்கள் தொடர்பு சாதனத்தின் மூலமாக இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை மிக வேகமாக அநேக மக்களுக்கு கொண்டு சென்றிருப்பார்".

அருள்திரு அல்பெரியோன் அடிகளார் குருபட்டம் பெற்ற பிறகு இத்தாலியில் உள்ள ஆல்ஃபா மறைவட்டத்திற்காக ஒரு அச்சக பள்ளியை ஆரம்பித்தார். அங்கே இளைஞர்கள் ஒரு தொழிலைக் கற்றுக் கொள்வதோடு அல்லாமல் அருமையான சமயம் சார்ந்த இலக்கியத்தையும் உருவாக்குவார்கள். இவர் 1914ம் ஆண்டு தூய பவுல் குழு என்ற பெயரில் ஒரு சமயம் சார்ந்த குழுவை ஆரம்பித்தார். அவர்கள் நவீன தொலைத் தொடர்பு சாதனத்தை பயன்படுத்தி நற்செய்தியை பரப்பினார்கள். தம்முடைய குருக்கள் குழுவில் (Ministry) அருள்திரு. அல்பெரியோன் வானொலி, தொலைக்காட்சி, பேசும் திரைப்படம் வரை எல்லா நிலை தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தலானார்.

இவர் 1971ம் ஆண்டு தம்முடைய 87 வது வயதில், திருத்தந்தை ஆறாம் பவுல் இவர் படுக்கையருகே இருக்க உயிர் துறந்தார். இவர் வலைதளம் (Internet) ஆரம்பிப்பதற்கு முன்பாக இறந்தார். அவர் இருந்திருந்தால் அதையும் மறைபரப்பு பணிக்கு மற்றொரு சாதனமாக பயன்படுத்தி யிருப்பார் என்றே அவருடைய திரளான அனுதாபிகள் நம்பினார்கள். அருள்திரு ஜேம்ஸ் அல்பெரியோன் 2003 ம் ஆண்டு ஏப்ரல் 27ம் நாள் அருளாளராக அறிவிக்கப்பட்டார்.●



# உலக மீட்பர் காப்பியம்



பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.

**21-ஆம் படலம்**

வாதை 8– வெட்டுக்கிளிகள் – ஆண்டவர் மோசேயை நோக்கி “கல் மழைக்குத் தப்பி நாட்டில் நிற்கும் எல்லாப் பயிர் பச்சைகளையும் தின்று தீர்க்க எகிப்து நாடெங்கும் வெட்டுக்கிளிகள் வரும்படியாக எகிப்து நாட்டின்மேல் உன்கையை நீட்டு” என்றார்.

காப்பியப் பாடல் 1049

**12 வெட்டுக்கிளிகள் ஏராளமாக வந்தே குவியும்.**

இவற்றை யெல்லாம் கேட்டான் மன்னவன்,
தவறு தனதென உணர்ந்தவன் தளர்ந்தான்!
நிலைதடு மாற, மேலும் மோசே
உலைவுறப் பார்வோன் தொடர்ந்தவர் சொன்னார்,
“எகிப்தில் வாழ்வோர் வீடுகள் தோறும்
திகிலுற் றதிர மக்கள் யாவரும்
எண்ணிலா அளவில் வெட்டுக் கிளிகள்
நண்ணிடக் கண்டே நடுங்கி ஒடுங்குவர்!
மண்ணில் இதுவரை வெட்டுக் கிளிகள்
கண்ணில் எவரும் கண்டிரா வாறே
வந்தே குவியும்! நொந்தழும் குடிகளோ
வெந்தே வெதும்பி விதியெனக் கதறுவர்!”

காப்பியப் பாடல் 1050

**13 வெட்டுக்கிளிகளின் வாதை என்றும் இவ்வுலகில் இறைவனின் அருஞ்செயல் நிகழ்வாய் நின்று அனைத்துலகும் அறியச் செய்யும்.**

சொன்னார் மோசே சுடஅவன் நெஞ்சமே,
“முன்பு வாழ்ந்த உங்கள் தந்தையர்
அந்தத் தந்தையர்க் குரிய முந்தையர்
வந்திந் நாட்டில் வாழ்ந்து தங்கிடத்
தொடங்கிய நாள்முதல் இன்றைய நாள்வரை;
அடர்த்தியாய்க் குவிந்ததை எகிப்தில் எங்குமே
கண்டிலர் எவருமே இதுபெரும் உண்மையே!
மண்டிடும் இந்த வெட்டுக் கிளிகளோ
இன்றைய எகிப்து நாட்டில் இறைவனின்
மன்னிடும் அருஞ்செயல் என்றே என்றுமே
பின்வரும் பரம்பரை அனைத்தும் அறியுமே”
என்றார் மோசே இறைவன் வாக்கென
மன்னன் மதித்து நடப்பதற் கென்றே!

காப்பியப் பாடல் 1051

**14 மோசே கூறியதைக் கேட்ட பார்வோன் வெறுப்புடன் அவரை நோக்கினான்!**

நன்றிவை உறுதியாய் நவின்றதன் பின்னர்
நின்றிடா மோசே நெஞ்சுரத் தோடே,
தம்முடை அண்ணன் ஆரோன் உடன்வர,
மும்மதப் பிடிக்குள் அகப்பட் டுழலும்
அரசனை விட்டு அவனதிர் வடையவே,
சிரமதைத் தாழ்த்தி கரமதை ஒடுக்கி
அரசனுக் கலுவலர் செய்மரி யாதை
பரம்பரை யாக செய்வது தெரிந்தும்
எதுவும் செயாதே அகன்றார்! காரணம்,
ததும்பச் சினமே கொண்டப் பார்வோன்
பார்வை நெருப்பால் சுட்டவ் விருவரை
மூர்க்க முகமதைக் காட்டின தாலே!

தொடரும்...

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன்பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

**2019-2020** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO செய்பவர்கள் **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.

# குடும்பத்தில் இருக்க வேண்டிய பண்புகள்

–G. *பொனிபாஸ் ஜூலியன்*, புதுவை–9.



குடும்பம் என்று சொன்னால் நம் கண்முன் வருவது திருக்குடும்பம். குடும்பம் ஒரு கோயில், குடும்பம் ஒரு பல்கலைக்கழகம். ஏன் திருக்குடும்பம் என்று பெயர்வந்தது என்று சற்றுசிந்தித்துப் பார்த்தால் “**திரு**” என்றச் சொல்லுக்கு பத்துவிதமான அர்த்தங்கள் உண்டு. அதாவது அன்பு, செல்வம், சந்தோஷம், சமாதானம், மன்னிப்பு, விட்டுக் கொடுத்தல், நம்பிக்கை, பகிர்வு, அனைவரையும் புரிந்து கொள்ளுதல், கடைசியாக கடவுள் மையம். சாதாரணமாக குடும்பத்தை மூன்று வித நிலைகளிலே பார்க்கலாம். ஒன்று **நல்லக் குடும்பம்,** இரண்டு **பரவாயில்லை,** மூன்று **மோசமானக் குடும்பம். நல்லக் குடும்பத்தின் பண்புகள்:** 1) எப்போதும் கடவுளை நம்பி அவரை நாடிச் செல்வார்கள், 2) யாருக்கும் துரோகம் செய்ய மாட்டார்கள், 3) முடிந்த வரையில் அனைவருக்கும் உதவி செய்வார்கள், 4) உலக காரியங்களுக்கு அவ்வளவாக முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். **பரவாயில்லை** என்ற குடும்பம் ஒருவட்டமிட்டு அதிலே வாழ்வார்கள், சற்று சுயநிலவாதிகள் என்றும் கூறலாம். இவர்களால் மற்ற எந்த பாதிப்பும் இல்லை. **மோசமான குடும்பத்தின்** தன்மைகள் எப்போதும் சண்டை, தவறான எண்ணங்கள், இவர்களால் சமூகத்திற்கும், நாட்டிற்கும் அச்சுறுத்தல் வரலாம்.

நாம் வீடு கட்டும்போது பொருட்களை வைத்துவீடுகட்ட வேண்டும்.குடும்பத்திற்கு முக்கியம் அடித்தளம். ஆனால் திருக்குடும்பம் கட்டும் வீடு முற்றிலும் வேறுபட்டது. கடவுள் கற்பித்த நல்ல பண்புகளை அடித்தளமாக அமைக்கிறார்கள். வீட்டிற்கு மேல் உறை அவசியம். ஆனால் திருக்குடும்பமோ நம்பிக்கை என்ற மேல் உறை இடுகிறது. வீடு என்று சொன்னால் நான்கு சுவர் முக்கியம். ஆனால் திருக்குடும்பத் திற்கு சுவர்கள் இறை வழிபாடு. ஜன்னல் மிக முக்கியம். ஆனால் திருக்குடும்பமோ தன்னலமற்ற அன்பு என்ற ஜன்னல் அமைத்து வாழ்கிறது. துர்நாற்றம் போக Exhaust Fan அமைக்கப்படுகிறது. ஆனால மனமுவந்து தியாகம் திருக்குடும்பம் கடைபிடிக்கிறது. வீட்டிற்கு வாசக்கால் முக்கியம். திருக்குடும்பம் மன்னிக்கும் இதயத்தை வாசக் காலாக பயன்படுத்துகிறது. கதவுகள் இல்லையென்றால் எப்படி போகவர முடியும். அளவற்ற பொறுமை என்ற கதவை பயன்படுத்துகிறது திருக்குடும்பம். நல்ல கற்களை தேர்ந்தெடுத்து வீடு கட்டுகிறோம். ஆனால் திருக்குடும்பமோ சொல்லின் கனிவு என்ற கற்களால் எழுப்பப்படுகிறது. மற்றவர் நம்மை அழைக்க காலிங் பெல் உண்டு. திருக்குடும்பமோ செயலில் நேர்மை என்ற பெல் அடிக்கிறார்கள்.சாதாரணமாக வீடுகளில் “கிரில் கேட்டு” வைக்கிறார்கள். இதற்கு ஈடாக திருக்குடும்பம் விட்டுக்கொடுத்தல், பிடிவாதம் இல்லை என்ற “கேட்டு” வைக்கிறது. திட்டமிட்டு வீடு அமைக்கப்படுகிறது. ஹால், படுக்கை அறை, சமையல் இடம் முதலியன. ஆனால் திருக்குடும்பமோ தமக்குள் பணி பகிர்வை அமைத்துக் கொண்டு அவரவர் அவர் வேலையை செய்கிறார்கள். கடைசியாக வீடு கட்டி முடித்தவுடன் அனைவரும் குடி ஏறுகிறார்கள். ஆனால் திருக்குடும்பமோ அழியாது ஒற்றுமையின் அடிப்படையில் செயல்படுகிறது.

புதிதாக ஒருப் பெண்ணை திருமணம் செய்து புகுந்த வீட்டிற்கு அனுப்பும் போது ஐந்து திரிகளைக் கொண்ட ஒரு குத்து விளக்கு கொடுத்து அனுப்புகிறார்கள்.இவர்களுடைய நோக்கம் அவள் ஒவ்வொரு திரியையும் ஏற்றுகின்ற போது சிறந்த கருத்துகளை கொண்டு ஏற்ற வேண்டும். அதாவது ஒன்று **அன்பு**, இரண்டு **நிதானம்**, மூன்று **மன உறுதி**, நான்கு **சமயோகித புத்தி,** ஐந்து **சகிப்புத் தன்மை.** நாம் அனைவரும் யோசித்து பார்த்து மேலே சொன்ன கருத்துகள் நம் குடும்பத்தில் பிரதிபலிக்கிறதா என்று பார்ப்போம். குடும்பம் சிறப்பாக இருந்தால் ஊர் முன்னேறும், நாடு முன்னேறும், பின்பு உலகமே முன்னேறும். இதை நாம் ஒரு சவாலாக ஏற்று இதைச் செயல்படுத்த முயற்சிப்போம். இறைவன் நமக்குஎப்போதும் உதவி செய்ய தயாராக இருக்கிறார். ●

**நீ பெரும்பான்மையின் பக்கம் இருப்பதை உணரும்போதெல்லாம் நின்று நிதானிக்க நேரமுண்டு. - மார்க்டுவைன்.**

## 5-ஆம் ஆண்டு நினைவு
## அஞ்சலி

மலர்ந்தது: 25-12-1929



உதிர்ந்தது: 06-01-2014

### S. பெரியநாயகமாரி

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக, புதுவை நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் 6-1-2019 ஞாயிறு காலை 7.00 மணிக்கும், மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக் கிழமைகளிலும் திருப்பலி நிறை வேற்றப்படும். இத்திருப்பலியில் பங்கு கொண்டு ஜெபிக்க வேண்டுகிறோம்.**

என்றும் உம் நினைவால் வாழும்
**குடும்பத்தினர்**
புதுவை.

## முதலாம் ஆண்டு நினைவு
## அஞ்சலி

பிறப்பு: 02-07-1942



இறப்பு 13-01-2018

### திரு. G. பாபுகுமார்

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக, கடலூர் சாமுபிள்ளை நகர், தொன் குவனெல்லா மாணவர் இல்லத்தில் 13.1.2019 ஞாயிறு காலை 7.15 மணிக்கு திருப்பலி நிறை வேற்றப்படும். இத்திருப்பலியில் பங்கு கொண்டு ஜெபிக்க வேண்டுகிறோம்.**

மீளா துயரில் வாடும்
**மனைவி, மகள்-மருமகன், மகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர்கள்.**
கடலூர்.

## 20-ஆம் ஆண்டு நினைவு
## அஞ்சலி

பிறப்பு: 08-12-1906



இறப்பு 04-01-1998

### அருட்திரு. ஹென்றி வியாலே MEP

குருபட்டம்: 5-7-1931

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக, புதுவை ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்தில் 6.1.2019 ஞாயிறு காலை 6.30 மணிக்கு திருப்பலி நிறை வேற்றப்படும். இத்திருப்பலியில் பங்குகொண்டு ஜெபிக்க வேண்டு கிறோம்.

அருட்தந்தையின் ஆசீருக்காக மன்றாடும்
**அருட்தந்தை அந்தையா**
**பெல்லாரி.**

## விண்ணக வாழ்வின்
## இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



### செல்வி. A. சகாயமேரி

தலைமை ஆசிரியை MSc.,B.Ed.,

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 13-11-1964 | 07-01-2017 |

இயேசுவைப்போல தன்னுயிர்
ஈந்து அர்ப்பண உணர்வோடு
கல்விப் பணியை
பொறுப்புடனும் மகிழ்வுடனும்
செய்த நல் **ஆசிரியையே!**
குடும்பத்தார் மற்றும்
அனைவராலும் நேசிக்கப்பட்ட
அன்பு **சகோதரியே!!** என்றும்
இறை வனின் அமைதியில் வாழ
இறைவனை வேண்டுகிறோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 06-01-2019 ஞாயிறு அன்று காலை 8.30 மணிக்கு சத்தியமங்கலம் கோடி அற்புதர் புனித அந்தோணியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

**பிரிவால் துயருறும்**
**அண்ணன்கள் - அண்ணிகள்**
**மாமா, அக்காள்கள், தம்பிகள், குழந்தைகள், மற்றும் உறவினர்கள்.**
சத்தியமங்கலம்.

## 26-ஆம் ஆண்டு நினைவு
## அஞ்சலி

பிறப்பு: 23-08-1926



இறப்பு 24-12-1992

### திரு. அந்துவான் ரத்தியே

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25**

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக, புதுவை குருசுமாநகர், புனித பிரான்சிஸ் அசிசியார் ஆலயத்தில் 6.1.2019 ஞாயிறு காலை 7.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

கணவரை இழந்து துயருறும்
**திருமதி. ஆன்ஜேல் ரத்தியே**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
புதுவை.

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய அமைதி அடைவார்களாக.**

# விண்ணக வாழ்வின் எட்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு : 05-11-1942
இறப்பு : 18-01-2010




பிறப்பு : 08-04-1936
இறப்பு : 08-01-2010

**திருமதி. D. ஜெயராக்கினி** **திரு.A.ஞானப்பிரகாசம்** Rtd.H.M.

"ஆண்டவரின் இல்லத்தில் நான் வாழ்நாள் முழுவதும் குடியிருக்க வேண்டும்" (சங்.26:4)

**செபம்:** கருணையே உருவான இறைவா! எங்கள் மத்தியில் பேரொளியாய் பிரகாசித்து, அன்பின் ஊற்றாய்த் திகழ்ந்து, செயலினால் அனைவர் மனதிலும் அமர்ந்து, எங்களைவிட்டு பிரிந்த எம் பெற்றோர்களை உம் திருமுக ஒளியில் இளைப்பாறச் செய்தருளும், ஆமென்.

**நினைவுத் திருப்பலி:** 6–1–2019 ஞாயிறு காலை 7.30 மணிக்கும், 20–01–2019 ஞாயிறு காலை 7.30 மணி, புனித மகதலா மரியா ஆலயம், அணையேரி.

**பிரிவால் துயருறும்**

**மகன்கள்:**
**G.ஜெயகொர்னேலியஸ்-M.சனேத்மரி**
**Fr.G.ஜெயமரிய வியானி**
**(ஜான்சி மறைமாவட்டம்)**

**மகள்கள்:**
**G.ஜெயசெல்வி- ஜேம்ஸ் பீட்டர் (லேட்)**
**G.ஜெயசாந்தி (லேட்) - F. லூக்காஸ்**
**பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.**

---

## விண்ணக வாழ்வின் 4-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 3-12-1954



இறப்பு: 04-01-2015

S.**மேரி ஜெஸிந்தா** M.A.,B.Ed.,N.I.S.
PET G.H.S. Varakalpattu, Cuddalore.

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25**

**இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 4-1-2019 காலை 6.00 மணிக்கு, திருப்பாப் புலியூர் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும். இவரது ஆன்ம சாந்திக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.**

*என்றும் நினைவில்*
கணவர்: திரு. **C. டேவிட்** ஆசிரியர்.
மகன்:**D.ஷிபின்** மகள்: **D. ஷர்மிளா**
மருமகன்: **D. அந்தோணிசாமி**
**மற்றும் உறவினர்கள்.**
கடலூர்-2.

## விண்ணக வாழ்வின் 8-ஆம் ஆண்டு நினைவு

மண்ணனில்:21-03-1925



விண்ணனில்:08-01-2011

**திரு.A.லூர்துசாமி** ஆசிரியர்

**"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 8–1–2019 செவ்வாய்க்கிழமை காலை 5.45 மணிக்கு பணிக்கன்குப்பம், புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**
பணிக்கன்குப்பம்.

## விண்ணக வாழ்வின் 7-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 02-07-1915



மறைவு: 12-01-2012

Cq-@-ADMDCHBS+**M.B.B.S (Fr)**
***@ MARIE RAYMOND BENEDICT APPASAMY***

**"நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர், அவரது அன்பிற்குரியவர்." (கொலோ 3:12)**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 12-01-2019 வியாழக்கிழமை காலை 6.15 மணிக்கு புதுவை ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் திருப்பலி நிறை வேற்றப்படும். இவரது ஆன்ம இளைப் பாற்றிக்காக செபிக்க வேண்டுகிறோம்.

**பிரிவால் துயருறும்**
**மகன்கள், மருமகள்கள், மகள்-மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்,**
**கொள்ளுப்பேரப்பிள்ளைகள்**
**மற்றும் குடும்பத்தினர்கள்.**

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி







**மண்ணகம்**
**28-02-1934**

**விண்ணகம்**
**01-01-2018**

# திரு. S. தேவராயன்

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாய் திகழ்வாய்" - (எசா.62:3)

அப்பா!
நீர் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
எங்கள் நினைவுகள் என்றென்றும் உமதோடு!
நீங்கள் எங்களின் இதயங்களில் நீங்காமல்
வீற்றிருப்பீர் என்னாலும்
எங்களுக்காக அயராது உழைத்த உமது
திருமேனி ஆண்டவரின் அரியாசனத்தில்
என்றென்றும் நிலைத்திருக்கும்
நீர் எங்களை விட்டு மறையவில்லை
மாறாக உமது அன்பையும் பண்பையும்
எங்களுக்காக விதைத்துச் சென்றிருக்கின்றீர்

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 01-01-2019 செவ்வாய் காலை 7.00 மணிக்கு புதுவை, நெல்லித்தோப்பு புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் இவரது முதலாமாண்டு நினைவுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**பிரிவால் துயருறும்**
**மனைவி, மகன்கள், மகள்கள்.**

நெல்லித்தோப்பு.

முதல் பக்கத் தொடர்ச்சி...

நடைபோட, இஸ்ராயேலர்களுக்கும், பாலஸ்தீனியர் களுக்கும், இந்த கிறிஸ்மஸ் தூண்டுதலாக இருக்கட்டும்.

**சிரியா, மற்றும் ஏமன் நாட்டு மக்களுக்காக....** "தாக்குதலின் கீழ் உள்ள அன்பு நிறைந்த சிரியா நாட்டில், பல ஆண்டு களாக நடைபெறும் போருக்குப்பின் தற்போது, உடன்பிறந்த உணர்வை, அந்நாட்டவர், மீண்டும் கண்டுகொள்ள, குழந்தை இயேசு அனுமதிப்பாராக, சிரியா நாட்டு மக்கள், குறிப்பாக, தங்கள் சொந்த நாட்டை விட்டு வெளியேறி, வேறு நாடுகளில் அடைக்கலம் புகுந்திருக்கும் மக்கள், சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்று, அமைதியில் வாழ உதவும் வகையில் அனைத்துலக சமுதாயம், பிரிவு எண்ணங் களையும், சுய நலத்தையும் ஒதுக்கி வைத்து, உறுதியான ஓர் அரசியல் தீர்வு காண உழைக்கட்டும். என் எண்ணங்கள் தற்போது ஏமன் நாட்டை நோககித் திரும்புகின்றன. அனைத்துலக சமுதாயத்தின் உதவியுடன் அங்கு கொணரப் பட்டுள்ள போர் நிறுத்தம், அந்நாட்டில் போராலும் பஞ்சத்தாலும் துன்புறும் குழந்தைகள், மற்றும் மக்களுக்கு துயர் துடைப்பைக் கொணர்வதாக.

**ஆப்ரிக்க கண்டத்தின் அமைதிக்காக...** - உணவு பாதுகாப்பு, மற்றும், மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் இலட்சக்கணக்கான புலம்பெயர்ந்தோர், மற்றும் குடிபெயர்ந் தோர், வாழும் ஆப்ரிக்கா கண்டத்தைக் குறித்தும் எண்ணிப் பார்க்கின்றேன். ஆப்ரிக்காவின் அரசியல் மற்றும் சமூக வாழ்வில் ஒப்புரவின் பாதையை ஊக்குவிக்க உழைக்கும் அனைத்து மனிதர்களின் முயற்சியை ஆசீர்வதித்து, அக்கண்டம் முழுவதும் உடன்பிறந்த உணர்வின் புது விடியல் மலரும் நோக்கத்தில், அமைதியின் அரசராம் இத்திருக் குழந்தை ஆயுத மோதல்களை அமைதிப்படுத்துவாராக.

**கொரிய தீபகற்பம், மற்றும் வெனிசுவேலா** - கொரிய தீபகற்பத்தின் உடன்பிறந்த உணர்வுப் பிணைப்புகளை ஊக்கமூட்டி, அண்மையில் எடுக்கப்பட்டுள்ள ஒன்றிணைப்பின் பாதையும், ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தீர்வுகளும், அனை வரின் நலவாழ்வையும், முன்னேற்றத்தையும், மனதில் கொண்டதாக செயல்பட, இந்த கிறிஸ்மஸ் உதவுவதாக. வெனிசுவேலா நாட்டில், மிகப் பெரிய அளவில் பாதிக்கப் பட்டுள்ள மக்களுக்கு உதவவும், நாட்டின் வளர்ச்சிக்கு பங்காற்றவும், தேவையான இணக்க வாழ்வைக் கண்டு கொண்டு, உடன்பிறந்த உணர்வுடன் அந்நாட்டு மக்கள் அனைவரும் உழைத்திட, இந்த ஆசீர்வதிக்கப்பட்ட காலம் அனுமதிப்பதாக.

**உக்ரைன் மற்றும் நிக்கராகுவா மக்களுக்காக...** தாமதமாக வந்து கொண்டிருக்கும் நீடித்த அமைதிக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் உக்ரைன் நாட்டிற்கு, புதிதாக பிறந்துள்ள நமதாண்டவர், துயர் துடைப்பைக் கொணர்வாராக. துன்பங்களிலிருந்து மீண்டு வரவும், மாண்புடன் கூடிய வாழ்க்கை நிலைகளை தன் குடிமக்களுக்கு வழங்கவும் ஆவல் கொண்டுள்ள நாடுகள், அனைவரின் உரிமைகளையும் மதிக்கும் அமைதியை தங்கள் அடிப்படையாகக் கொண்டிருக் கட்டும். உக்ரைனின் கிறிஸ்தவ சமூகத்தோடு நான் மிக நெருக்கமாக உள்ளேன். சமுதாயத்தில் அவர்கள், உடன் பிறப்பு உணர்வையும், நட்புணர்வையும் வளர்த்திட ஆவல் கொள்கின்றேன். குழந்தை இயேசுவின் முன், நிக்கராகுவா மக்கள் அனைவரும் தங்களை உடன்பிறந்தோராய் கண்டு கொள்ளட்டும். பிரிவினைகளையும் முரண்பாடுகளையும் களைந்து, ஒப்புரவை ஊக்குவித்து, நாட்டின் வருங்காலத்தை, அவர்கள், ஒன்றிணைந்து கட்டியெழுப்பட்டும்.

**சிறுபான்மையினராக துன்புறும் கிறிஸ்தவர்கள்** - கருத்தியல் கொள்கைகள், கலாச்சார மற்றும் பொருளியல் அடிமை முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, தங்கள் சுதந்திரமும் தனித்துவமும் பறிபோகும் நிலைகலால் துன்புறும் மக்களைக் குறித்தும் பசியாலும், கல்வின்மையாலும், மருத்துவ வசதிகள் இன்மையாலும் துன்புறும் மக்களைக் குறித்தும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். கிறிஸ்து பிறப்பு விழாவைச் சிறப்பிப்பதில் சிரமங்களைச் சந்திக்கும், குறிப்பாக சிறுபான்மையினராக சில நாடுகளில் வாழும் கிறிஸ்தவர்கள் நோக்கி, தனிப்பட்ட முறையில், என் எண்ணங்கள், செல் கின்றன. இவர்களும், மத சிறுபான்மையினரும் அமைதியில் வாழவும், தங்கள் உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதை, குறிப்பாக, இவர்களின் மத உரிமைகள் மதிக்கப்படுவதை காணவும், இறைவன் உதவுவாராக. இந்தப் புல்லணையில் இரவின் குளிரில் படுத்திருக்கும் இந்தச் சிறு குழந்தை, உலகின் அனைத்துக் குழந்தைகளையும், கைவிடப்பட்ட மனிதர்களையும் கண்ணோக்குவாராக. மீட்பின் பிறப்பில், அமைதியையும் ஆறுதலையும் நாம் கண்டுகொள்வோமாக நாம் அனைவரும் நம் ஒரே வானகத் தந்தையால் அன்பு கூரப்படுகிறோம் என்பதை உணர்ந்து, நாம் அனைவரும் சகோதரர், சகோதரிகள் என்பதை கண்டுகொண்டு, அதே உணர்வுடன் வாழ்வோமாக இவ்வாறு, தன் ஊர்பி எத் ஓர்பி எனும் ஊருக்கும் உலகுக்குமான கிறிஸ்மஸ் சிறப்புச் செய்தியை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அனவருக்கும் தன் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை வழங்கினார். இறுதியில் அனைவருக்கும் ஊர்பி எத் ஓர்பி சிறப்பு ஆசீரையும் அளித்தார். ●

---

**இந்தியா: பொகீபில் டிசம்பர்.25:** நாட்டிலேயே மிக நீளமானதாகக் கருதப்படும் "ரயில்பாதை மற்றும் தார்சாலை" உள்ளடக்கிய இரண்டு அடுக்குப் பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி செவ்வாய்க்கிழமை 25-12-2018 அன்று திறந்து வைத்தார். அஸ்ஸாம் மாநிலத்தில் பொகீபில் என்னும் இடத்தில் பிரம்மபுத்ரா நதியின் குறுக்கே 4.94 கி.மீ. தொலைவுக்கு இந்தப் பாலம் கட்டப்பட்டுள்ளது. பாலத்தின் கீழ் அடுக்கில் இரட்டை அகல ரயில் பாதையும், மேல் அடுக்கில் மூன்று வழிச் சாலையும் இடம் பெற்றுள்ளன. 1997-இல் அன்றைய பிரதமர் தேவ கவுடா அடிக்கல் நாட்டினார். 2002-இல் அன்றைய பிரதமர் வாஜ்பாயி திட்டப் பணிகள் தொடங்கி 2007-இல், காங்கிரஸ் அரசு அதனை தேசிய திட்டமாக அறிவித்து 16 ஆண்டுகளுக்குப்பின் பாலம் கட்டுமானம் முடிவுற்று, 25-12-2018 இல வாஜ்பாய் பிறந்த தினத்தில், கிறிஸ்மஸ் அன்று திறந்து வைக்கப்பட்டது.

**பிலிப்பைன்ஸ்:** மணிலா டிச.29: பிலிப்பைன்ஸ் அருகே சனிக்கிழமை 29-12-2018-இல் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் உண்டானது. 6.9 ரிக்டர் அளவில் பதிவானது. டவாவோ நகருக்கு தென் கிழக்கே 59 கி.மீ. தொலைவில் ஏற்பட்டது. இதனால் சுனாமி ஏற்படவாய்ப்புள்ளதாக எச்சரிக்கை மையம் தெரிவித்தது. புவித் தகடுகள் ஒன்றோடு ஒன்று உராயும் பகுதியில் பிலிப்பைன்ஸ் அமைந்துள்ளதால் அங்கு நில நடுக்கங்கள அடிக்கடி ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**சென்னை: டிசம்பர்.29:** முற்றிலும் குளிரூட்டப்பட்ட, அதிக இருக்கை வசதி கொண்ட புறநகர் மின்சார ரயிலை சென்னை ஐ.சி.எ.ஃப் (ICF) தயாரித்துள்ளது. இந்த ரயில், மும்பை புறநகர் ரயில் சேவைக்காக ஜனவரி 3ஆவது வாரத்தில் ஒப்படைக்கப்படவுள்ளது. இந்த ரயிலில் 2 இயக்குநர் பெட்டிகளும், 4 என்ஜின் பொருத்தப்பட்ட மோட்டார் கொண்ட பயணிகள் பெட்டிகளும், 6 சாதாரண பயணிகள் பெட்டிகளும் என மொத்தம் 12 பெட்டிகள் உள்ளன. இதனை 110 கி.மீ. வேகம் வரை இயக்க இயலும். இதில் 1116 பயணிகள் வரை பயணிக்க முடியும்.

*Printed and Published* on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore,
by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.